Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.51/2019

Deposition of witness for: PW - 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரகாஷ் | Father/Husband Name | : | கருணாகரன் |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |
| Date | : | 02.07.2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 02nd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1) நான் தற்போது மேலூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.11.2015–ம் தேதி மதுரை மாவட்டம், ஒத்தக்கடை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11.00 மணியளவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலிருந்து பெறப்பட்ட தபாலில் இருந்த உத்தரவின் பேரில் கண்ணப்பன் என்பவரின் புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.582/2015, இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புகார் மனுவின் அசலையும், முதல் தகவல் அறிக்கையையும் மேலூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராஜ்குமார், அகமது ரியாசுதீன்

ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கின் சாட்சிகளான கண்ணப்பன், ராஜ்குமார், சேகர், முத்தையா மகன் ராஜ்குமார், சிவக்குமார், அஹமது ரியாசுதீன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடி வந்த நிலையில் 13.12.2015–ம் தேதி 23.30 மணிக்கு திருமோகூரில் ரோட்டில் உள்ள எதிரியின் வீட்டின் முன்பு கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

2) பின்னர் 15.12.2015–ம் தேதி எனது புலன்விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் சம்பவத்தில் ஈடுபடாத எதிரிகளான திரவியம், கணேசன், வினோத், சுப்பிரமணியன் ஆகியோர்களின் பெயரை நீக்கல் செய்தும், சட்டப்பிரிவுகளான 147, 294(பி), 506(1) இ.த.ச–விலிருந்து 147 இ.த.ச–வை நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த எதிரிகள் நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக எனக்கு பின்னர் வந்த சார்பு ஆய்வாளர் திருமதி.ஜெயலெட்சுமி என்பவரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கின் புகார்தாரரான கண்ணப்பனிடம் ஒன்றும் எழுதாத

வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் திருப்புவனம் என்றால் சரிதான். புகார்தாரர் கண்ணப்பனும் எங்கள் தாலுகாவை சேர்ந்தவர் என்றால் சரிதான். கண்ணப்பனின் குடும்பத்தினரும், நாங்களும் நெருங்கிய நண்பர்களாக பழகி வந்ததால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் பார்வை மகஜர் சாட்சிகள் ராஜ்குமார், அஹமது ரியாசுதீன் அவர்களிடம் ஒன்றும் எழுதாத வெற்றுத்தாளில் கையொப்பம் வாங்கி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன், அதனால் தான் அவர்கள் நீதிமன்றத்தில் பிறழ் சாட்சி ஆகியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எந்த சம்பவமும் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் நடைபெறவில்லை, காவல்நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எனது உயர் அதிகாரிகள் மற்றும் இவ்வழக்கின் புகார்தாரர் கேட்டுக்கொண்டதினால் எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்தேன் என்றால் சரியல்ல. அதே போல் சொன்ன இடத்தில், சொன்னது போல் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.